பொருளடக்கம்



குகைவாசிகள் கொள்கைப் பாதை / 9

குகைவாசிகள் பதிப்பகப் பாதை / 18

மூல நூலாசிரியர் வாழ்க்கைக் குறிப்பு / 23

பகுதி 1 தவ்ஹீதும் இறைத்தூதர்களும் / 35

1 தவ்ஹீதின் முக்கியத்துவம் / 37

தொடக்கம் / 38

தவ்ஹீதின் விளக்கம் / 38

இறைத்தூதர்களும் அவர்களின் மக்களும் / 39

இணைவைப்போரிடம் நபியவர்கள் யுத்தம் செய்த காரணம் / 40

இறைத்தூதர்கள் அனுப்பப்பட்ட நோக்கம் / 40

2 தவ்ஹீதும் இணைவைப்பாளர்களும் / 41

இணைவைப்பாளர்கள் முன்பே உறுதிகொண்டிருந்த நம்பிக்கை / 41

இணைவைப்பாளர்கள் மறுத்துவிட்ட ஏகத்துவ நம்பிக்கை / 43

3 நபியவர்களுக்கும் இணைவைப்பாளர்களுக்கும் போர் மூண்டது ஏன்? / 45

அல்லாஹ்வையும் வணங்கினார்கள்; படைப்புகளையும் வணங்கினார்கள் / 46

இணைவைப்புதான் நபியவர்களின் யுத்தத்திற்குக் காரணம் / 46

இணைவைப்பின் விளைவு / 47

இறைத்தூதர்கள் முன்வைத்த தவ்ஹீது அழைப்பு / 47

கலிமாவை நாவால் மொழிவது மட்டுமே நோக்கமல்ல / 49

4 ஈமானின் மகிழ்ச்சியும் இணைவைப்பின் அச்சமும் / 51

இணைவைப்பைக் குறித்துப்
பெரும்பான்மையின் அறியாமை / 51

ஈமானின் மகிழ்ச்சியும் இணைவைப்பின் அச்சமும் / 52

5 தவ்ஹீதும் எதிரிகளும் / 54

எதிர்ப்பில்லாமல் தவ்ஹீது இல்லை / 55

தவ்ஹீதை எதிர்க்க எதிரிகளிடம் பல
சிந்தனைப்பள்ளிகள் / 55

எதிரிகளை வீழ்த்த ஏகத்துவக் கல்விதான் ஆயுதம் / 56

ஆயுதமற்ற தவ்ஹீதுக்காரரின் நிலை / 57

6 இணைவைப்பாளர்களின் வாதங்களும் நமது பதில்களும் / 59

தவறான வாதங்களுக்குச் சுருக்கமான, விரிவான பதில்கள் / 60

சுருக்கமான (முஜ்மல்) பதில் / 60

சந்தேகத்தைப் பின்பற்றத் தூண்டும் ஆதாரங்கள் / 61

மு஼ஃபஸ்ஸல் எனும் விளக்கமான பதில் / 63

பகுதி 2 இணைவைப்பாளர்களின் வாதங்களும்
தக்க பதில்களும் / 65

1 முதல் வாதம் / 67

அல்லாஹ்வின் வல்லமையை ஏற்றுக்கொண்டிருப்பதாகக் கூறி
இணைவைப்பை நியாயப்படுத்தி வாதிப்பது / 67

2 இரண்டாவது வாதம் / 69

சிலை வணக்கம் மட்டுமே இணைவைப்பு என்று வாதிப்பது / 69

3 மூன்றாவது வாதம் / 73

இறைநேசர்களிடம் சிபாரிசைத் தவிர வேறு எதையும்
கேட்கவில்லை என்று வாதிப்பது / 73

4 நான்காவது வாதம் / 75

இறைநேசர்களிடம் பிரார்த்திப்பது
வணக்கமல்ல என்று வாதிப்பது / 76

துஆ ஒரு வணக்கம் / 77

பலியிடுதல் ஒரு வணக்கம் / 77

இணைவைப்பாளர்களின் எல்லா இணைவைப்புகளையும்
குறித்த உண்மைநிலையைப் புரியச் செய்தல் / 78

5 ஐந்தாவது வாதம் / 79

ஷஃபாஅத்தை நாம் மறுப்பதாகச் சொல்லி வாதிப்பது / 79

ஷஃபாஅத்தின் உண்மைநிலை / 80

எப்படி ஷஃபாஅத் கேட்க வேண்டும்? / 81

6 ஆறாவது வாதம் / 82

நபியவர்களுக்கு வழங்கப்பட்டதை முன்வைத்துக் கேட்பதில்
என்ன தவறு என்று வாதிப்பது / 82

அசத்திய வாதத்தைத் திருப்பி அடித்தல் / 83

7 ஏழாவது வாதம் / 84

இணைவைப்பை எதிர்த்துக்கொண்டே
தன் அறியாமையை நியாயப்படுத்தி வாதிப்பது / 84

8 எட்டாவது வாதம் / 86

சிலை வணக்கத்தில் மட்டுமே
இணைவைப்பு என்று வாதிப்பது / 86

9 ஒன்பதாவது வாதம் / 87

பிற மதத்தவர்களின் இணைவைப்பையும்
தம்முடையதையும் வேறுபடுத்தி வாதிப்பது / 89

ஷிர்க்கையும் இபாதத்தையும் தெளிவாகப்
புரியச் செய்தல் / 90

முற்காலத்தவர்களின் இணைவைப்பைவிட
இக்காலத்தவர்களின் இணைவைப்பில்
இருக்கும் கடுமை / 91

முதலாவது, முற்காலத்தவர்கள் துன்பமான நேரத்தில்
அல்லாஹ்விடமே பிரார்த்தனை செய்தார்கள்;
இக்காலத்தவர்கள் அப்படியல்ல. / 91

இரண்டாவது, முற்காலத்தவர்கள் நல்லோர்களிடம்
பிரார்த்தனை செய்து இணைவைத்தார்கள்;
இக்காலத்தவர்களோ பாவிகளைக்கூடப் புனிதர்களாக நம்பி
இணைவைக்கிறார்கள் / 94

10 பத்தாவது வாதம் / 96

எவ்வளவுதான் இணைவைத்தாலும் நாங்கள் முஸ்லிம்கள்தான் என்று வாதிப்பது / 98

முதலாவது பதில் / 98

இரண்டாவது பதில் / 100

மூன்றாவது பதில் / 101

நான்காவது பதில் / 102

ஐந்தாவது பதில் / 103

ஆறாவது பதில் / 103

ஏழாவது பதில் / 104

எட்டாவது பதில் / 106

11 பதினொன்றாவது வாதம் / 107

சிலையையோ மரத்தையோ வணங்கக் கேட்டவர்கள் போல நாங்களும் காஃபிர் ஆகமாட்டோம் என்று வாதிப்பது / 107

12 பன்னிரண்டாவது வாதம் / 110

ஈமான் மறைவானது என்கிற வாதத்தை முன்வைத்து ஷிர்க்கை நியாயப்படுத்தி வாதிப்பது / 111

13 பதிமூன்றாவது வாதம் / 116

மறுமையில் நபிமார்களிடம் அபயம் தேடுவது போல் இங்கும் அவர்களிடம் அபயம் தேடுவது இணைவைப்பல்ல என்று வாதிப்பது / 116

14 பதினான்காவது வாதம் / 119

ஜிப்ரீல் உதவ முன்வந்ததைக் கூறி வாதிப்பது / 119

பதில் / 120

பகுதி 3 தவ்ஹீதை மறுப்பது செல்லாது / 121

இறுதி வார்த்தைகள் / 123

தவ்ஹீதை மறுப்பவர்களின் பொதுவான குணம் / 124

நயவஞ்சகனாக இருக்கக் கூடாது / 125

தொடக்கம்

அளவற்ற அருளாளன், நிகரற்ற அன்புடையோன் அல்லாஹ்[3] வின் பெயரால் தொடங்குகிறேன்.

நன்கு அறிந்துகொள்ளுங்கள். அல்லாஹ் உங்களுக்குக் கருணைகாட்டுவானாக.

தவ்ஹீதின் விளக்கம்

எல்லாக் குறைகளைவிட்டும் மிகத் தூய்மையானவனாகிய அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே எல்லா வணக்கவழிபாடு களையும் செய்து அவனை வணக்கத்தால் ஒருமைப்படுத்து வதே 'தவ்ஹீது' (التوحيد) என்னும் ஏக இறைநம்பிக்கையாகும்.

ஒன்றை உறுதிப்படுத்தினால், அது முழுமையான உறுதிப்படுத்தல் ஆகாது. மறுக்கப்பட வேண்டியவைக்கு அதில் பங்கிருப்பதற்குச் சாத்தியம் உண்டு. எதை உறுதிப்படுத்த வேண்டுமோ அதைத் தவிர உள்ள அனைத்தையும் மறுத்தால்தான், உண்மையில் உறுதிப்படுத்துதல் அங்கு நிகழும். உதாரண மாக, 'இன்னார் நின்றுகொண்டிருக்கிறார்' என்று நீங்கள் கூறினால், உண்மை யில் அவர் ஒருவர் மட்டுமே நிற்கிறார் என நீங்கள் உறுதிப்படுத்தியதாக ஆகாது. அந்த நிற்கும் செயலை அவர் மட்டுமே செய்கிறார் என்று வரையறை செய்யவில்லை. அவருடன் மற்றவரும் நின்றுகொண்டிருக்கலாம். 'எவரும் நிற்கவில்லை' எனக் கூறினாலோ, அனைத்தையும் மறுத்ததாக ஆகிவிடும். ஆனால், 'ஜைது தவிர யாரும் நிற்கவில்லை' என்று கூறினால், நிற்கும் செயலை ஜைதுக்கு ஒருமைப்படுத்திவிட்டீர்கள்; அவரைத் தவிர மற்றவர்களுக்கு மறுத்தும்விட்டீர்கள். தவ்ஹீதின் உண்மை நிலை இங்கு தான் இருக்கிறது. மறுப்பதும் உறுதிப்படுத்துவதும் இல்லாமல் தவ்ஹீது முழுமையடையாது. (மஜ்மூஃ ஃபதாவா இப்னு உஸைமீன் 1/17)

3 அல்லாஹ் (ﷻ): படைப்புகள் வணங்குவதற்கும் கீழ்ப்படிவதற்கும் தகுதியான இறைவன் என்று பொருள். ஒவ்வொரு மொழியிலும் இறைவனைக் குறிப்பிடச் சொல்லப்படும் பொதுச்சொல் போல அறபுமொழியிலும் இதை அறபுக் கிறித்துவர்களும் யூதர்களும் பயன்படுத்தி வருகிறார்கள். எனினும், உண்மையில் இது வெறுமனே ஓர் அறபுச்சொல் அல்ல. அதையும் தாண்டி இறைவன் தனக்குத்தானே சூட்டிக்கொண்ட மிக அழகிய பெயர். அனைத் தையும் படைத்து பரிபாலிக்கும் ஒரே இறைவனை மட்டுமே இது குறிக்கும்.

2

தவ்ஹீதும் இணைவைப்பாளர்களும்

✿

وَإِلَّا فَهَؤُلَاءِ الْمُشْرِكُونَ الذِينَ قَاتَلَهُمْ رَسُولُ اللهِ صلى الله عليه وسلم يَشْهَدُونَ أَنَّ اللهَ هُوَ الخالِقُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَنَّهُ لَا يَرْزُقُ إِلَّا هُوَ، وَلَا يُحْيِي ولا يُمِيتُ إِلَّا هُوَ، وَلَا يُدَبِّرُ الأَمْرَ إِلَّا هُوَ، وَأَنَّ جَمِيعَ السَّمَاوَاتِ السَّبْعِ وَمَنْ فِيهِنَّ، والأَرَضِينَ السَّبْعِ وَمَنْ فِيهِنَّ؛ كُلُّهُمْ عَبِيدُهُ وَتَحْتَ تَصَرُّفِهِ وَقَهْرِهِ. فَإِذَا أَرَدتَ الدَّلِيلَ عَلَى أَنَّ هَؤُلَاءِ الْمُشْرِكِينَ الَّذِينَ قَاتَلَهُمْ رَسُولُ اللهِ صلى الله عليه وسلم يَشْهَدُونَ بِهَذَا فَاقْرَأْ عَلَيْهِ: ﴿قُلْ مَنْ يَرْزُقُكُمْ مِنَ السَّمَاءِ وَالْأَرْضِ أَمَّنْ يَمْلِكُ السَّمْعَ وَالْأَبْصَارَ وَمَنْ يُخْرِجُ الْحَيَّ مِنَ الْمَيِّتِ وَيُخْرِجُ الْمَيِّتَ مِنَ الْحَيِّ وَمَنْ يُدَبِّرُ الْأَمْرَ فَسَيَقُولُونَ اللهُ﴾ [اليونس: ٣١] الآيَةَ، وَقَوْلَهُ تَعَالَى: ﴿قُل لِمَنِ الْأَرْضُ وَمَن فِيهَا﴾ [المؤمنون: ٨٤]، إِلَى قَوْلِهِ: ﴿فَأَنَّى تُسْحَرُونَ﴾ [المؤمنون: ٨٩] ، وَغَيْرَ ذَلكَ مِنَ الآيَاتِ العَظِيمَةِ الدَّالَّةِ عَلَى ذَلِكَ. إِذَا تَحَقَّقْتَ أَنَّهُمْ مُقِرُّونَ بِهَذَا ، وأَنَّهُ لَمْ يُدْخِلْهُم فِي التَّوحِيدِ الَّذِي دَعَتْ إِلَيْهِ الرُّسُلُ، وَدَعَاهُمْ إِلَيهِ رَسُولُ اللهِ صلى الله عليه وسلم. وَعَرَفْتَ أَنَّ التَّوْحِيدَ الَّذِي جَحَدُوهُ هُوَ تَوْحِيدُ العِبَادَةِ، الَّذِي يُسَمِّيهِ المشرِكُونَ فِي زَمَانِنَا الاعْتِقَادَ؛

✿

இணைவைப்பாளர்கள் முன்பே உறுதிகொண்டிருந்த நம்பிக்கை

அல்லாஹ் ஒருவன் மட்டுமே அகிலங்கள் அனைத்தையும் படைக்கக்கூடியவன்; அவனே உணவளிப்பவன்; அவன் இணையற்றவன்; அவனைத் தவிர உணவளிப்பவன் வேறு யாருமில்லை; அவனைத் தவிர உயிர்ப்பிப்பவனும், மரணிக்கச் செய்பவனும் யாருமில்லை; அவன்தான் காரியங்கள் அனைத்

إِنَّ هَـذَا لَشَيْءٌ عُجَابٌ﴾ [ص: ٥]. فَإِذا عَرَفْتَ أَنَّ جُهَالَ الكُفَّارِ يَعْرِفُونَ ذَلِكَ ؛ فَالعَجَبُ مِمَّنْ يَدَّعِي الإِسْـلَامَ وَهُوَ لَا يَعْرِفُ مِنْ تَفْسِـيرِ هَذِهِ الكَلِمَةِ مَا عَرَفَ جُهَّالُ الكُفَّارِ، بَلْ يَظُـنُّ أَنَّ ذَلِكَ هُوَ التَّلَفُّظُ بِحُرُوفِهَا، مِنْ غَيْرِ اعْتِقَادِ القَلْبِ لِشَيْءٍ مِنَ المَعَانِي، وَالحَاذِقُ مِنْهُمْ يَظُنُّ أَنَّ مَعْنَاهَا: لَا يَخْلُقُ وَلَا يَرْزُقُ وَلَا يُدَبِّرُ الأَمْرَ إِلَّا اللهُ وَحْدَهُ. فَلَا خَيْرَ فِي رَجُلٍ جُهَّالُ الكُفَّارِ أَعْلَمُ مِنْهُ بِمَعْنَى لَا إِلَهَ إِلَّا اللهُ.

✿

அல்லாஹ்வையும் வணங்கினார்கள்; படைப்புகளையும் வணங்கினார்கள்

அக்காலத்து இணைவைப்பாளர்கள் அல்லாஹ்வை இரவு பகலாக அழைத்துப் பிரார்த்தனை செய்துவந்தார்கள். அத்துடன் தங்கள் நலனுக்காகவும், அல்லாஹ்வின்பக்கம் நெருங்க தங்களுக்குப் பரிந்து பேசுவதற்காகவும், சிலர் வானவர்களை அழைத்துப் பிரார்த்தனை செய்து உதவி தேடினார்கள். மேலும், 'லாத்' போன்ற இறந்துபோன நல்லோர்களையும், நபி ஈஸா ﷺ அவர்களையும் அழைத்து உதவி தேடினார்கள்.

இணைவைப்புதான் நபியவர்களின் யுத்தத்திற்குக் காரணம்

இச்செயல்களெல்லாம் அல்லாஹ்விற்கு இணைவைப்பதாகும் என்பதற்காகவே அந்த மக்களை எதிர்த்து அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் போர் செய்தார்கள். வணக்கவகைகள் எல்லாவற்றையும் அல்லாஹ் ஒருவனுக்கு மட்டுமே செய்ய வேண்டும் என்று கூறி மக்களை அழைத்தார்கள். அல்லாஹ் தன் வேதத்தில் கூறுகிறான்:

وَأَنَّ الْمَسَاجِدَ لِلَّهِ فَلَا تَدْعُوا مَعَ اللَّهِ أَحَداً

நிச்சயமாக மஸ்ஜிதுகளெல்லாம் அல்லாஹ்வின் வணக்கத்திற்காகவே உள்ளன. ஆகவே, அவற்றில் அல்லாஹ்வுடன் மற்றெவரையும் பெயர் கூறி அழைத்துப் பிரார்த்தனை செய்யாதீர்கள். (குர்ஆன் 72:18)

மேலும், அல்லாஹ் கூறுகிறான்:

இக்காலத்தில் ஷிர்க்கான செயல்களைச் செய்துவருகின்றவர்கள் எவ்வாறு சில போலி ஷேக்மார்களைத் தங்கள் ஷெய்க் என்றும், எஜமான் என்றும் சொல்லி (தங்களுக்காக அல்லாஹ் விடம் அவர்கள் பரிந்துபேசுவார்கள் என்று) நம்பி வருகிறார்களோ அதைப் போன்றுதான் அக்காலப் பல தெய்வக்கொள்கைக்காரர்களும் 'இலாஹ்' என்ற சொல்லிற்குப் பொருள் கொடுத்து வந்தார்கள்.

கலிமாவை நாவால் மொழிவது மட்டுமே நோக்கமல்ல

இந்த மூடநம்பிக்கையில் இருந்து வந்த மக்களை ஏக தெய்வக் கலிமாவான 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்னும் திருக்கலிமாவின்பால் அழைப்பதற்காகவே அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் அனுப்பப்பட்டார்கள். இக்கலிமாவின் நோக்கம் அதை நாவால் மொழிவது மட்டுமல்ல. மாறாக, வணக்கத்தால் அல்லாஹ்வை ஒருமைப்படுத்தி, அவன் ஒருவனிடமே அனைத்துக் காரியங்களையும், தேவைகளையும் கோர வேண்டும்; அவனல்லாமல் உலகில் வணங்கப்படுகின்ற அனைத்துப் படைப்பினங்களையும் மறுத்து அவற்றை விட்டும் ஒதுங்கி விலகிக்கொள்ள வேண்டும்; இதில் உள்ளமும் நாவும் ஒருசேர உறுதிகொள்ள வேண்டும் என்பதைத்தான் பெருமானார் ﷺ அவர்கள் இக்கலிமாவின் மூலம் நாடுகிறார்கள் என்பதை அக்காலப் பல தெய்வக்கொள்கைக்காரர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். (நாவால் மொழிவதை மட்டும்தான் பெருமானார் ﷺ அவர்கள் நாடுகிறார்கள் என்று அவர்கள் கருதியிருப்பார்களானால் அக்கலிமாவை ஒரு முறையல்ல பல முறை கூறியிருப்பார்கள்.) எனவேதான் அல்லாஹ்வின் தூதர் ﷺ அம்மக்களிடம் 'லா இலாஹ இல்லல்லாஹ்' என்று கூறுங்கள் என வேண்டியபோது பின்வரும் கேள்வியைக் கேட்டார்கள்.

أَجَعَلَ الْآلِهَةَ إِلَٰهًا وَاحِدًا إِنَّ هَٰذَا لَشَيْءٌ عُجَابٌ

முஹம்மது (நம்) தெய்வங்கள் யாவற்றையும் (நிராகரித்து விட்டு வணக்கத்திற்குரியவன்) ஒரே இறைவன்தான் என்று ஆக்கிவிட்டாரோ? நிச்சயமாக இது மிக ஆச்சரியமான ஒன்றாகவே இருக்கிறது. (குர்ஆன் 38:5)

4

ஈமானின் மகிழ்ச்சியும்
இணைவைப்பின் அச்சமும்

✿

إِذَا عَرَفْتَ مَا قُلْتُ لَكَ مَعْرِفَةَ قَلْبٍ، وَعَرَفْتَ الشِّرْكَ بِاللهِ الَّذِي قَالَ اللهُ فِيهِ: ﴿إِنَّ اللهَ لَا يَغْفِرُ أَن يُشْرَكَ بِهِ وَيَغْفِرُ مَا دُونَ ذَلِكَ لِمَن يَشَاءُ﴾ [النِّسَاء: ٤٨]. وَعَرَفْتَ دِينَ اللهِ الَّذِي بَعَثَ بِهِ الرُّسُلَ مِنْ أَوَّلِهِم إِلَى آخِرِهِمْ، الَّذِي لَا يَقْبَلُ اللهُ مِنْ أَحَدٍ دِينًا سِوَاهُ. وَعَرَفْتَ ما أَصْبَحَ غَالِبُ النَّاسِ عَلَيْهِ مِنَ الجَهْلِ بِهَذَا أَفَادَكَ فَائِدَتَيْنِ: الأُولَى: الفَرَحُ بِفَضْلِ اللهِ وَرَحْمَتِهِ؛ كَمَا قَالَ تَعَالَى: ﴿قُلْ بِفَضْلِ اللهِ وَبِرَحْمَتِهِ فَبِذَلِكَ فَلْيَفْرَحُوا هُوَ خَيْرٌ مِمَّا يَجْمَعُونَ﴾ [يونس : ٥٨]. وَأَفَادَكَ أَيْضًا الخَوْفَ العَظِيمَ؛ فَإِنَّكَ إِذَا عَرَفْتَ أَنَّ الْإِنْسَانَ يَكْفُرُ بِكَلِمَةٍ يُخْرِجُها مِنْ لِسَانِهِ دُونَ قَلْبِهِ، وَقَدْ يَقُولُهَا وَهُوَ جَاهِلٌ فَلَا يُعْذَرُ بِالجَهْلِ، وَقَدْ يَقُولُها وَهُوَ يَظُنُّ أَنَّهَا تُقَرِّبُهُ إِلَى اللهِ زُلْفَى كَمَا ظَنَّ الكُفَّارُ. خُصُوصًا إِنْ أَلْهَمَكَ اللهُ مَا قَصَّ عَنْ قَوْمِ مُوسَى - مَعَ صَلاحِهِمْ وَعِلْمِهِمْ - أَنَّهُمْ أَتَوْهُ قَائِلِينَ: ﴿اجْعَلْ لَنَا إِلَهًا كَمَا لَهُمْ آلِهَةٌ﴾ [الأعراف: ١٣٨]؛ فَحِينَئِذٍ يَعْظُمُ خَوْفُكَ وَحِرْصُكَ عَلَى مَا يُخَلِّصُكَ مِنْ هَذَا وَأَمْثَالِهِ.

✿

இணைவைப்பைக் குறித்துப்
பெரும்பான்மையின் அறியாமை

இது வரை கூறப்பட்டவற்றை உளப்பூர்வமாக நன்கறிந்த பின்

إِنَّ اللَّه لاَ يَغْفِرُ أَن يُشْرَكَ بِهِ وَيَغْفِرُ مَا دُونَ ذَلِكَ لِمَن يَشَاءُ

நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைப்பதை ஒருபோதும் மன்னிக்கமாட்டான்; இதனை அல்லாத குற்றத்தை விரும்பியவர்களுக்கு மன்னிப்பான் (குர்ஆன் 4: 48)

1

முதல் வாதம்

✿

وَأَمَّا الجَوَابُ المُفَصَّلُ : فَإِنَّ أَعْدَاءَ اللهِ لَهُمُ اعْتِرَاضَاتٌ كَثِيرَةٌ عَلَى دِينِ الرُّسُلِ، يَصُدُّونَ بِهَا النَّاسَ عَنْهُ . مِنْهَا : قَولُهُمْ : نَحْنُ لَا نُشْرِكُ بِاللهِ شَـيْئًا، بَلْ نَشْـهَدُ أَنَّهُ لَا يَخْلُقُ، وَلَا يَرْزُقُ، وَلَا يُحْـيِي، وَلَا يُمِيـتُ، وَلَا يُدَبِّرُ الأَمْرَ، وَلَا يَنْفَعُ وَلَا يَضُرُّ - إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَنَّ مُحَمَّدًا وَ لَا يَمْلِكُ لِنَفْسِهِ نَفْعًا وَلَا ضَرًّا فَضْلًا عَنْ عَبْدِ القَادِرِ أَوْ غَيْرِهِ، وَلَـكِن أَنَا مُذْنِـبٌ، وَالصَّالِحُونَ لَهُم جَاهٌ عِنْدَ اللهِ، وَأَطْلُبُ مِنَ اللهِ بِهِمْ. فَجَاوِبْهُ بِما تَقَدَّمَ؛ وَهُوَ أَنَّ الَّذِينَ قَاتَلَهُم رَسُـولُ اللهِ صلى الله عليه وسـلم مُقِرُّونَ بِمَا ذَكَرْتَ لِي - أَيُّهَا المُبْطِلُ ، وَمُقِرُّونَ أَنَّ أَوْثَانَهُم لَا تُدَبِّرُ شَيْئًا، وَإِنَّمَا أَرَادُوا مِمَّن قَصَدُوا الجَاهَ وَالشَّفَاعَةَ، وَاقْرَأْ عَلَيْهِ مَا ذَكَرَ اللهُ فِي كِتَابِهِ وَوَضَّحَهُ.

✿

அல்லாஹ்வின் வல்லமையை ஏற்றுக்கொண்டிருப்பதாகக் கூறி இணைவைப்பை நியாயப்படுத்தி வாதிப்பது

நாங்கள் அல்லாஹ்விற்கு இணைவைப்பதில்லை. படைப்பவனும் உணவளிப்பவனும், நன்மை தீமைக்குரியவனும் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை என்று நாங்கள் சான்று பகர்கின்றோம். அவன் தனித்தவன், இணையற்றவன். முஹம்மது ﷺ அவர்கள் தனக்கே எந்த நன்மையும் சங்கடமும் செய்துகொள்வதற்கு இயலாதவர்களாக இருக்கும்போது, அப்துல் காதிர் ஜீலானி போன்றவர்களால் எப்படி முடியும்? இருப்பினும் நாங்கள் பாவிகளாக இருக்கின்றோம். நல்லோர்களுக்கு அல்லாஹ்விடத்தில் நல்ல அந்தஸ்து உள்ளது.

இறைநேசர்களிடம் பிரார்த்திப்பது வணக்கமல்ல என்று வாதிப்பது

நான் அல்லாஹ்வைத்தான் வணங்குகிறேன். துன்ப நேரங்களில் இறந்த நல்லோர்களிடம் பாதுகாவல் தேடுவதும், அவர்களை அழைத்து உதவி தேடுவதும் வணக்கத்தில் சேர்ந்ததல்லவே?

பதில்

வணக்கத்தை அல்லாஹ் ஒருவனுக்கு மட்டும் தூய்மையாகச் செய்வது உங்கள்மீது கடமையாக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா? என்று அவர்களிடம் கேட்க வேண்டும். அதற்கு அவர் 'ஆம்' எனப் பதில் கூறுவார். அப் போது அவரிடம், 'அல்லாஹ் ஒருவனுக்கு மட்டும் தூய்மை யாகச் செய்வது உங்கள்மீது கடமையாக்கப்பட்டுள்ளதே அந்த வணக்கம் எது? அதன் வகைகள் எத்தனை என்பதை எனக்கு விளக்கிக் கூறுங்கள்' என்று கேட்க வேண்டும். அதற்கு அவரால் பதில் கூற முடியாது. அப்போது அவருக்கு வணக்கத்தின் பொருளை விளக்க வேண்டும்.

ادْعُواْ رَبَّكُمْ تَضَرُّعاً وَخُفْيَةً إِنَّهُ لاَ يُحِبُّ الْمُعْتَدِينَ

(விசுவாசிகளே!) நீங்கள் மிக்க தாழ்மையாகவும், மெதுவாக வும் உங்கள் இறைவனிடமே உங்களுக்குத் தேவையான வற்றைக் கோரிப் பிரார்த்தியுங்கள் (குர்ஆன் 7:55) என அல்லாஹ் கூறியுள்ளான்.

இவ்வசனத்தை ஓதி விளக்கியப் பின், இவ்வசனத்தில் குறிப் பிடப்பட்டுள்ள (துஆ) 'அழைத்துத் தேவைகளை வேண்டு தல்' என்பது வணக்கவகைகளைச் சார்ந்ததுதானா? என அவ ரிடம் கேட்க வேண்டும். அதற்கு 'ஆம், வணக்க வகைகளைச் சார்ந்ததுதான்' என்ற பதிலையே கூறுவார். ஏனென்றால்,

الدُّعَاءُ مُخُّ العِبَادَةِ

'துஆவே வணக்கத்தின் சாரம்' என்று அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் கூறியுள்ளார்கள்.[13] (அறிவிப்பு: அனஸ்

13 பலவீனமான நபிமொழிக்கு மாற்று நபிமொழி: இந்த நபிமொழி பலவீனமானது என்று இமாம் முஹம்மது நாசிருத்தீன் அல்அல்பானீ ﷺ கூறுகிறார்கள்.

7

ஏழாவது வாதம்

✿

فَإِنْ قَالَ : أَنَا لَا أُشْرِكُ بِاللهِ شَيْئًا، حَاشَا وَكَلَّا، ولكنَّ الالْتِجَاءَ إِلَى الصَّالِحِينَ لَيْسَ بِشِرْكٍ. فَقُلْ لَهُ : إِذَا كُنْتَ تُقِرُّ أَنَّ اللهَ حَرَّمَ الشِّرْكَ أَعْظَمَ مِنْ تَحْرِيمِ الزِّنا ، وَتُقِرُّ أَنَّ اللهَ لَا يَغْفِرُهُ، فَمَا هَذَا الأَمْرُ الَّذِي عَظَمَهُ اللهُ وَذَكَرَ أَنَّهُ لَا يَغْفِرُهُ؟! فَإِنَّهُ لَا يَدْرِي. فَقُلْ لَهُ : كَيْفَ تُبَرِّئُ نَفْسَكَ مِنَ الشِّرْكِ وَأَنْتَ لَا تَعْرِفُهُ؟ كَيْفَ يُحَرِّمُ اللهُ عَلَيْكَ هَذَا وَيَذْكُرُ أَنَّهُ لَا يَغْفِرُهُ، وَلَا تَسْأَلُ عَنْهُ ولَا تَعْرِفُهُ؟ أَتَظُنُّ أَنَّ اللهَ لا يُحَرِّمُهُ هَذَا التَّحْرِيمَ وَلَا يُبَيِّنُهُ لَنَا؟!

✿

இணைவைப்பை எதிர்த்துக்கொண்டே தன் அறியாமையை நியாயப்படுத்தி வாதிப்பது

நான் அல்லாஹ்விற்கு எதையும் இணையாக்கவில்லை; அல்லாஹ் என்னை அதைவிட்டும் காப்பாற்றுவானாக; ஆனால், இறந்த நல்லோர்களை அழைத்து உதவி தேடுவது ஷிர்க் அல்லவே?

பதில்

விபச்சாரம் செய்வதைத் தடைசெய்திருப்பதைவிடப் பன் மடங்கு அதிகமாக ஷிர்க்கான காரியங்கள் செய்வதை அல் லாஹ் தடைசெய்திருக்கின்றான் என்றும், ஷிர்க்கான செயலை அல்லாஹ் மன்னிப்பதில்லை என்றும் நீங்கள் நம்பி உறுதி கொள்கின்றீர்கள். மன்னிக்கப்படாத குற்றமான ஷிர்க்கின் பொருள் என்ன? அதன் வகைகள் எத்தனை என்று உங்களிடம் கேட்டால், 'தெரியாது' என்று சொல்கின்றீர்கள். ஷிர்க் என்றால் என்னவென்று நீங்கள் தெரியாமல் இருக்கும்போது, ஒரு விசயத்தை இது ஷிர்க் அல்ல என்று உங்களால் எப்படிக் கூற

لَهُ وَيَنْسَوْنَ سَادَاتِهِمْ - تَبَيَّنَ لَهُ الفَرْقُ بَيْنَ شِرْكِ أَهْلِ زَمَانِنَا وَشِرْكِ الْأَوَّلِينَ، وَلَكِن أَيْنَ مَنْ يَفْهَمُ قَلْبُهُ هَذِهِ المَسْـأَلَةَ فَهُمَا رَاسِخًا ؟! واللهُ المُسْتَعانُ. وَالأَمْرُ الثَّانِي : أَنَّ الأَوَّلِينَ يَدْعُونَ مَعَ اللهِ أُنَاسًـا مُقَرَّبِينَ عِنْدَ اللهِ ؛ إِمَّا نَبِيًّا، وَإِمَّا وَلِيًّا، وَإِمَّا مَلَائِكَةً، أَوْ يَدْعُونَ أَحْجَارًا وَأَشْـجَارًا مُطِيعَةً للهِ تَعَالَى لَيْسَـت بِعَاصِيَةٍ، وَأَهْلُ زَمَانِنَا يَدْعُونَ مَعَ اللهِ أُنَاسًا مِنْ أَفْسَـقِ النَّاسِ، وَالَّذِينَ يَدْعُونَهُمْ هُمُ الَّذِينَ يَحْكُونَ عَنْهُمُ الفُجُورَ مِنَ الزِّنَا وَالسَّرِقَةِ وَتَـرْكِ الصَّـلَاةِ وَغَيْرِ ذَلِـكَ. وَالَّذِي يَعْتَقِـدُ فِي الصَّالِحِ وَالَّذِي لَا يَعْصِي - مِثْلِ الخَشَـبِ وَالحَجَرِ ؛ أَهْوَنُ مِمَّنْ يَعْتَقِدُ فِيمَنْ يُشاهِدُ فِسْقَهُ وفَسَادَهُ ويَشْهَدُ بِهِ. إِذَا تَحَقَّقْتَ أَنَّ الَّذِينَ قَاتَلَهُمْ رَسُولُ اللهِ صلى الله عليه وسلم أَصَحُّ عُقُولًا، وَأَخَفُّ شِرْكًا مِنْ هَؤُلاَءِ، فَاعْلَمْ أَنَّ لِهَؤُلاَءِ شُبْهَةٌ يُورِدُونَهَا عَلَى مَا ذَكَرْنا ، وَهِيَ مِنْ أَعْظَمِ شُبَهِهِمْ، فَأَصْغِ سَمْعَكَ لِجَوابِهَا.

✿

பிற மதத்தவர்களின் இணைவைப்பையும் தம்முடையதையும் வேறுபடுத்தி வாதிப்பது

மரத்தையும், கல்லையும், சமாதி மீதுள்ள கட்டிடத்தையும் நாடிச் செல்லக்கூடியவர்கள் அவற்றில் அடக்கப்பட்டிருக்கும் நல்லடியார்களை அழைத்து, அவர்களுக்கு அறுத்துப் பலி கொடுத்து, 'அவர்கள் எங்களை அல்லாஹ்வின்பால் சேர்த்து வைக்கிறார்கள்; அவர்களின் புண்ணியத்தால் எங்களுக்குத் தொல்லைகள் ஏதும் வருவதில்லை' என்று ஒருவன் கூறுவதுதானே ஷிர்க்?

பதில்

ஆம்! நீங்கள் கூறியது முற்றிலும் உண்மை. அது ஷிர்க்குத் தான். அதே ஷிர்க்கைத்தானே நீங்களும் செய்கிறீர்கள். அதாவது, கற்களிடத்திலும், கப்றுகள்மீது கட்டப்பட்டுள்ள கட்டிடங்களிடத்திலும் இவ்வாறே நீங்களும் செய்கிறீர்கள். இந்தச் செயல்கள்தான் சிலைவணக்கமாகும் என்பதை இவை நிரூபிக்கிறதல்லவா?

சிலை வணக்கம் மட்டும்தான் ஷிர்க் என்றும் இறந்த நல்லடியார்களை அழைத்து உதவி தேடுவது ஷிர்க்கைச் சார்ந்ததல்ல